**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.203/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | செல்வக்குமார் |
| Father's Name/Husband Name: | செல்லமுத்து(எ) பச்சமுத்து |
| Village : | குரும்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 51/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பலூர் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எனது அப்பா பெயர் செல்லமுத்து ஊரில் அவரை பச்சமுத்து என்றும் அழைப்பார்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு நானும் என் மனைவியும் எதிரிகளுடன் பேசிக் கொண்டிருந்த போது கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்த யாரோ சிலர் என்னையும், என் மனைவியையும் அடித்துவிட்டனர். கூட்டத்தில் எதிரிகள் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது அ.சா.1 புகார் கொடுத்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். தற்போது இல்லை. 19.09.2018ம் தேதி 9 மணியளவில் நானும் எனது மனைவியும் காட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் சம்பவயிடத்திற்கு வந்து அ.சா.1யை கெட்ட வார்த்தையால் திட்டி மூன்று எதிரிகள் கையாலும், குச்சியாலும் தலையில் மற்றம் உடம்பில் அடித்ததாகவும் அதில் அ.சா.1ன் தலையில் பலத்த அடிப்பட்டு மண்டை உடைந்துவிட்டது என்றும் சண்டையை தடுக்க வந்த என்னை எதிரிகள் தள்ளிவிட்டு கொலை மிரட்டல் விடுத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

தற்போது நாங்களும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அதனால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.